விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 29 முஹற 19 இதழ் 243
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 15-10-84

## இஸ்ரேலியர் இருப்பதன் எதிரொலி: சர்வதேசமாநாடு ஒத்திவைப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு கொழும்பில் நடைபெறவிருந்த அகில உலக முஸ்லிம் மாநாடு கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது இஸ்ரேலியர்கள் இருப்பதாலேயே இம்மாநாடு ஒத்திவைக்கப்படுவதாக சவூதி அரேபியாவிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது,

இந்த மாநாட்டின் போஷகராக இலங்கைக்கான டொமினிக்கன் குடியரசின் கவுன்சில் ஜெனரல் அல்ஹாஜ் அப்துல் எம். அமீர் கடமையாற்றி வருகிறார். தலைவராக கொழும்பு துணைமேயர் ஹுசைன் முகமட் பணியாற்றி வருகிறார்.

## ரயில்—கார் விபத்து! நால்வர் பலத்த காயம்

[கா. யோகநாதன்]

சங்கத்தானையில் நேற்றுக் காலை நடந்த சரக்கு ரயில்-கார்விபத்தில், காரில் சென்ற நால்வர் பலத்த காயமடைந்தனர்கார். பலத்தசேதத்துக்குள்ளானது.

(5ம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக் கடலில் இரவில் ‘கடல்அடங்கு’ சட்டம்!

[கொழும்பு]

வடபகுதி கடற்பிராந்தியத்தில் ஊரடங்குச் சட்டம் (‘கடல் அடங்கு’) அமுல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாலை 6 மணி முதல் காலை6 மணி வரையான காலப்பகுதி யில் வடபகுதி கடலுக்குச் செல்பவர்கள் அப்பாவி மக்களாக கருதப்படமாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 29ம் திகதியே இவ்வாறான தடை உத்தரவொன்று இணைப்பு அதிகாரியினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பின்னர் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு.

(5-ம் பக்கம் பார்க்க)

# வடக்கில் 4 புதிய ராணுவமுகாம்

## தீவிரவாதிகள் ஆயுதங்களை கொண்டுவருதலை தடுக்கவாம்

(கொழும்பு)

வடபகுதியில் புதிதாக மேலும்நான்கு இராணுவ முகாம்கள் அமைக்கப்படவுள்ளன.

கடல் கண்காணிப்பு வலயத்தையும் மீறி இந்தியாவிலிருந்து தமிழ்த்தீவிரவாதிகள் பயங்கர ஆயுதங்களுடன் வடபகுதிக்குள் நுழைவதனை தடுக்கும் முகமாகவே இந்த புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்படவுள்ளன'' என்று தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

[5ம் பக்கம் பார்க்க]

## நாவற்குழியில் தொடரும் சத்தியாக்கிரகம்— “வேலை இழக்கும் நிலை: எம்மைக் காக்கவும்” ஊழியர்கள் உருக்கமானவேண்கோள்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி ‘அன்றிஸ்’ ஊழியர் நேற்று இரண்டாவது தினமாக சத்தியாக்கிரகம் செய்தனர்.

’அன்றிஸ்’ நிறுவனத்தில் இம்மாதம் 10-ம் திகதி இடம்பெற்ற கொள்ளையைத் தொடர்ந்து ஊழியர்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நிறுவனத்தின் முன்னால் வீதி ஓரத்தில் உள்ள பந்தலின் கீழ் சுலோக அட்டை

[5ம் பக்கம் பார்க்க]

## தமிழீழ தீவிரவாதிகள் எவரும் இல்லை!

(கொழும்பு)

''இந்தியாவில் தமிழீழ தீவிரவாதிகள் எவரும் அடைக்கலம் பெற்றிருக்க வில்லை, எனவே அவர்களை இலங்கையிடம் திருப்பி ஒப்படைப்பது என்ற பேச்சுக்கு இடமே இல்லை'' என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு, எஸ் ஜே. எஸ். சத்வால் வெளிவிவகார அமைச்சர் ஜனுப் ஏ. ஸி. எச். ஹமீத்திடம் மீண்டும் உறுதிபடக் கூறியுள்ளார்

(5-ம் பக்கம் பார்க்க)

## வல்வையில் மாணவர் நடத்திய ஊர்வலம்: ராணுவத்தினருடன் பெற்றோர் பேச்சு

[கரவெட்டி]

வடமராட்சி மாணவர்ஒன்றியத்தினர் வல்வெட்டித்துறை புனித செபஸ்ரியார் ஆலயத்தில் நடத்திவந்த உண்ணாவிரதம் முடிந்ததும் நேற்று ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

ஊர்வலம் சிவன்கோவில் ஊடாக வல்வை சந்தியைச் சென்றடைந்தது. மாணவர்கள் கோஷமெழுப்பியவாறு சென்றனர். ஏராளமான பெற்றோரும் கலந்துகொண்டனர்.

ஊர்வலம் சென்றுகொண்டி

(5-ம் பக்கம் பார்க்க)

## பிரஜைகள் இணைப்புக்குழு நேற்று அங்குரார்ப்பணம்

[யாழ்ப்பாணம்]

பிரஜைகள் இணைப்புக் குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்த இணைப்புக்குழுவில் வடபகுதியிலுள்ள பிரஜைகள்குழு, தலைவர், செயலாளர் ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

யாழ். மாநகரசபை கூடத்தில் நேற்றுக்காலை யாழ். பிரஜைகள்குழு உபதலைவர் திரு. அருமைநாயகம் தலைமையில், இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, கரவெட்டி மாதகல், கொக்குவில், முல்லைதீவு, கிளிநொச்சி பிரஜைகள் குழுவினரும் வவனியாவிலிருந்து பிரதிநிதி ஒருவர் பங்குபற்றியதுடன் கல்விமான்கள், வைத்திய

(5-ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் சிறைவைக்கப்பட்டுள்ள தமிழக மீனவரை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்” இந்திராவிடம் ஜனர்த்தனன் கோரிக்கை

[புதுடில்லி]

''இந்தியாவின்கடல்பிராந்தியத்தில் அத்துமீறிப் பிரவேசித்து வலுக்கட்டாயமாக 80 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கொண்டு சென்று சிறைவைத்துள்ளனர். இவர்களை உடனடியாக விடுதலைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்று இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு உலக தமிழர் இளைஞர் பேரவைத் தலைவர் திரு இரா. ஜனர்த்தனன் அனுப்பியுள்ள அவசரத் தந்தியில் தெரிவத்துள்ளார்.

அவர் அனுப்பியுள்ள தந்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

''இந்திய மீனவர்கள் தமது நாட்டின் கடற்பிராந்திய எல்லைக்குள்தான் மீன்பிடித்தார்

(5ம் பக்கம் பார்க்க)

## ஜனதிபதிக்கு தந்தி

(யாழ்ப்பாணம்)

''பரீட்சைகள் அண்மித்துக் கொண்டிருக்கின்ற இந்நேரத்தில் பெற்றோர்கள், மாணவர்களின் நியாயமான கோரிக்கைக்கு எவ்வித கவனம் செலுத்தாமல் இருப்பது அதிர்ச்சியைக் கொடுக்கின்றது

பிரஜைகள் இணைப்புக்குழு. நேற்று ஜனதிபதி திரு. ஜே. ஆர், ஜெயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள தந்தியில் மேற்கண்டவாறு தெரி

[5ம் பக்கம் பார்க்க]

## கடற்றொழில் அமைச்சில் நாளை மாநாடு!

(யாழ்ப்பாணம்)

கடற்படையினரால மன்னாரில் கைதான 94 தமிழக மீனவர்கள் பற்றியும், 17 வள்ளங்கள் பற்றியும், நாளை செவ்வாய்க்கிழமை கடற்றொழில் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா கொழும்பில் மகாநாடொன்றை கூட்டுவார்.

இம்மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இந்திய தூதராலய சட்ட ஆலோசகர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் அழைக்கப்பட்டுள்ளார்.

இம்மகாநாட்டில் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளும், சட்டமா அதிபர் திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொள்வார்கள்.

(க)

## சார்ஜண்ட் சுட்டுக்கொலை

(இரா உதயகுமார்)

கிழக்கு மாகாணத்திலுள்ள மகாயோ பொலிஸ் நிலைய சார்ஜண்ட் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வீதியில் சோதனையிட்டுக் கொண்டிருந்த போது அவ்வழியே வந்த வானென்றில் வந்தவர்கள் இவரை சுட்டுக்

(5-ம் பக்கம் பார்க்க)

## சீருடையில் வந்தவர்கள் சந்தியில் அட்டகாசம்!

(கிளிநொச்சி)

சீருடையில் வந்தகோஷ்டியினர் வீதியில் சென்றவர்கள் மீது நடத்தியதாக்குதலில் பலர் காயமடைந்தனர். வாகனங்கள் சிலவும் சேதப்படுத்தப்பட்டன.

கிளிநொச்சி, கரடிப்போக்குச்சந்தியில் சீருடையில் வந்

(5-ம் பக்கம் பார்க்க)

# அச் விளம்பரம்

## விற்பனைக்கு

Bairaha Farms Hisex வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் 15-ந் திகதி திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். சற்குண ராசா, பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 89

E. L. F. 3 . 9 (350) இசுசு 1981 28 ஸ்ரீ 2119 லொறி விற்பனைக்குண்டு. K. V. துரைசாமி, லட்சுமி திலகம், மயிலிட்டி, தொலைபேசி; 31, K, K, S. 205

பழைய பூங்கா வீதியிலுள்ள உயர்நீதிமன்ற அரசாங்க விடுதிக்கு அருகாமையில் ஒருநிலப் பரப்பு காணிவிற்பனைக்குண்டு. தொடர்பு: சி இராசேந்திரம், 74, பழையபூங்காவீதி. யாழ்ப்பாணம். 191

கொழும்புத்துறை ரோட்டிற்கு 100 யார் உள்ளே 5½ பரப்புக்காணி (நன்னீர்க் கிணற்றுடனும் சகல வசதிகளுடனும்) உடன் விற்பனைக்குண்டு. முழுமையாகவோ, பகுதியாகவோ கொடுக்கப்படும். தொடர்பு; திருமதி சத்திவேல், 83, ரெம்பிள் ரோட், யாழ்ப்பாணம். 185

குளப்பிட்டிச் சந்தியிலிருந்து 150 யார் தூரத்தில் ஆனைக்கோட்டை வீதியில் நல்ல சுற்றுடலில் வீடு கட்ட உகந்த 2½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:வெ பூபாலசிங்கம், டிஸ்பென்சரி ஒழுங்கை, உரும்பராய். 181

EL தொடர்பிலக்கமுறை மொறிஸ் மைனர் கார் உடன் விற்பனைக்குண்டு. எல்லா நேரங்களிலும் பார்வையிடலாம். உரிமையாளர் வெளிநாடு செல்கின்றார். தொடர்பு: தம்பிராஜா, 'அருட்சோதி', பொற்பதி வீதி, கொக்குவில். 210

நல்ல நிலையிலுள்ள Honda CD 70 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: K. சிவசிதம்பரம், 50, விதானை வீதி, சுண்டிக்குளி. 223

EN 7000 தொடர்பிலக்கமுடைய மொரிஸ் மைனர் கார் ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: A. சிவபாதசுந்தரம், 454 (பழைய நம்பர்), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 214

மின்சாரத்தில் இயங்கும் மணித்தியாலத்திற்கு 3300 கற்பூர வில்லைகள் அடிக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. ரூபா 17500/- சொனிக்ஸ் வீடியோ சென்ரர், சந்தைக்கு அருகாமை, மானிப்பாய். 209

புதிய சரஸ்வதி வீணைகள் (Unpolished) விற்பனைக்குண்டு. தொடர்பு 134, பிரதான வீதி, யாழ்ப்பர்ணம். 193

கைதடி நுணுவிலில் முப்பது பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: பா. ரவிச்சந்திரன், மட்டுவில் தெற்கு, வாகையடி வீதி, சாவகச்சேரி. 190

கிளிநொச்சி நகரசபை எல்லைக்குள் (ஒரு மைலிற்குள்) ஒரு ஏக்கர் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: A. E. சமாதானம், 30/1, மருதடி ரோட், யாழ்ப்பாணம். 221

## தேவை

யாழ். நகரில் ஒரு பிரபலம் வாய்ந்த ஸ்தாபனத்திற்கு ரேடியோ திருத்தும் மெக்கானிக்கும் பாடல்கள் ஒலிப்பதிவுசெய்பவர்களும் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். விளம்பர இல 215, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 215

## கல்வி

யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் 6-ம் தரப் பிரவேசப்பரீட்சை 24-11-84. விண்ணப் முடிவு திகதி 19-10-84. கடந்தகாலப் பரீட்சைகளின் 10 வினாத்தாள்களும் 30 தமிழ்க்கட்டுரைகளும் கொண்ட பரீட்சைத் துணைநூல் ரூபா 12/50. கிடைக்குமிடங்கள்:-ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். 213

## தவறிவிட்டது

10-10-84-ல் மருதனுமடம் சந்தி, கோப்பாய் ரோட்டில் திருமணப்பதிவு கலர் படங்கள் கொண்ட அல்பம்(Album) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடுவில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 212

## வாடகைக்கு

திருநெல்வேலியில் நல்ல இடத்தில் இரண்டு கடைகள் வாடகைக்கு உள்ளன. கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 158, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 158

கந்தர்மடத்தில் 4 அறைகளுடன் சகல வசதிகள் கொண்ட வீடு உடன் வாடகைக்குண்டு. 190, அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (121)

காரைநகர்
ப. நோ. கூ. சங்கம்
வெற்றுச்சாக்கு
கேள்விப்பத்திரம்

## அறிவித்தல்

2000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. 25-10-84 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மீளப்பெறும் வைப்புப்பணமாக ரூபா 250/- உம் செலுத்தவேண்டும். நிபந்தனைகளையும் விபரங்களையும் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் யாவும் ''தலைவர், ப. நோ. கூ. சங்கம், காரைநகர்'' என்றமுகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படல்வேண்டும். இக் கேள்விப் பத்திரம் சங்கத்தால் நிராகரிப்பதற்கு உரிமையுண்டு.

குறிப்பு: காரியாலயத்தில் ரூபா இரண்டு செலுத்தி கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

ச. சிவஞானம்
தலைவர்
ப. நோ. கூ. சங்கம்
காரைநகர். 197

## விபத்தில் வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)
நவாலியில் நடந்த வான் விபத்தில் சைக்கிளில் சென்ற 65 வயது வயோதிபர் பலியானார்.

மானிப்பாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஆறுமுகம் என்பவரே பலியானவராவர்.

யாழ்.பதில் நீதவான் எஸ் அமிர்தலிங்கம்மரணவிசாரணை நடத்தினர்.

சந்தேகநபரை கைதுசெய்ய பொலிஸாருக்கு உத்தரவிட்ட யாழ். பதில் நீதவான் விபத்து மரணம் எனத்தீர்ப்பளித்தார். [க]

## பிறந்தநாள் வாழ்த்து

கிருபாகரன்

அல்வாய் மேற்கைச் சேர்ந்த காசிலிங்கம், புஸ்பவதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கிருபாகரன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று அவரது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் சகல கலைகளும் பெற்று சீரும் சிறப்புடன் திக்கம் மடத்துவாசல் விநாயகர் அருளால் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள். 192

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்டநீதிமன்றம்
யாழ்ப்பாணம்

வழக்கு இல:
தத்துவம்/3823

காங்கேசன்துறை வீதி, தாவடி கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்து விடயத்தில்

மரணமடைந்தவர்

பொன்னுத்துரை கைம்பெண் தங்கம்மா காங்கேசன் துறை வீதி, தாவடி, கோண்டாவில்.

மனுதார்.

மேல் இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறித்த காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 2-ம் திகதி முற்பகல் 9-00மணியளவில் இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்டுள்ளபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளை ஆக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1984ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்
207

## DAY CLASS 2-ம் பிரிவு

ஆரம்பம்: 15-10-84 திங்கள்
MONDAY — FRIDAY
1-00 — 2-00 — நுண்கணிதம்
2-00 — 3-00 — ஒருபுள்ளியில் தாக்கும் விசைகள்
ஆசிரியர் : திரு. கிருஷ்ணு B. Sc.
விபரங்கட்கு :
**New Master Institute**
BMC LANE, — JAFFNA.

## திருத்திய புதிய பதிப்பு

வெளிவந்து விற்பனையாகிக்கொண்டிருக்கிறது!

1. விஞ்ஞானம் - பகுதி 2. 8ம் வகுப்பு
விலை ரூபா 12-00
[திரான்ஸ்சிஸ்ரர், கோள் மண்டலம் ஆகிய பகுதிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன]
2. விஞ்ஞானப் பயிற்சி - 8ம் வகுப்பு
[மாதிரி வினாத்தாளும் - விடைகளும்]
விலை ரூபா 12/-
3. மாதிரி வினாத்தாள் - 10ம் வகுப்பு
[பகுதி I, பகுதி II] (விடைகளுடன்)
விலை ரூபா 12/-

ஆசிரியர்: ஐ. ஜெகநாதன்
கல்வி ஆலோசகர் (விஞ்ஞானம்)
எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக விபரங்களுக்கு;
தலைவர்
விஞ்ஞான வளர்ச்சிக்கழகம்
புத்தூர். 175

## நுணாவில் (கண்டி வீதி)

சுலபமான மாதாந்த தவணைகட்டண முறையில் காணி உரிமையாளராகலாம்.




ஒரு சில
காணித் துண்டுகளே
எஞ்சியுள்ளன.
விரையுங்கள்!

**த பிறுன்ஸ் கம்பனி லிமிட்டட்,**
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி - 23680

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை உடுப்பிட்டி உப அலுவலகம் கரவெட்டி

உள்ளூராட்சி மன்றங்களில், அரசாங்கத் திணைக்களங்களில் அல்லது கூட்டுத்தாபனங்களில் ரூபா 50,000/-க்கு அல்லது அதற்குக் கூடிய வேலைகளுக்காகப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்காணும் வேலைக்கான முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் 1984- 11- 14 ஆந் திகதி நண்பகல் 12-00 மணிக்குமுன் பிரதிச் செயலாளர் (நிர். சட். வேலை) யாழ்ப்பாண அபிவிருதிச் சபை, த. பெ. எண். 19, யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை இவ் அலுவலவகத்தில் 1984- 11- 06 ஆந் திகதி நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை அனுப்பப்படும் கடித உறைகளில் இடதுபக்க மேல்மூலையில் ''யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை உடுபபிட்டி உப அலுவலக நூல் நிலையக் கட்டிடம் அமைத்தல்'' எனக்குறிப்பிட வேண்டும். ஏனைய விபரங்களை இவ் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலைவிபரம் | கேள்விப்பத்திர வைப்புப்பணம் | கேள்விப்பத்திரக் கட்டணம் |
|---|---|---|
| யாழ்ப்பாண அபிவிருத்திச்சபை உடுப்பிட்டி உப அலுவலக நூல் நிலையக் கட்டிடம் அமைத்தல். | 750/- | 100/- |

நா. பேராசிரியன்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
யாழ். அ. ச. உடுப்பிட்டி உப அலுவலகம்.

உடுப்பிட்டி உப அலுவலகம்,
கரவெட்டி, 10- 10- 84. 199

## வடக்குக்கிழக்கு வங்கிகளில்

# பணம்செலுத்திய பின்பும் மீட்கப்படாத நகைகள்

### வாடிக்கையாளர்கள் கவலே

[ ஏ. வி. மாணிக்கம் ]

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள வங்கிகளில் வாடிக்கையாளர்களால் வைக்கப்பட்ட நகைகளே மீட்பதற்காக சுமார் மூன்றரைக் கோடி ரூபா (வட்டிப்பணம் உட்பட) செலுத்தி 10 மாதங்களுக்கு மேலாகியும் வாடிக்கையாளர்களுக்கு நகைகள் வழங்கப்படவில்லே எனப் புகார் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் 40 வங்கிக் கிளேகளிலும் வாடிக்கையாளர்களால் அடகு வைக்கப்பட்ட நகைகளே பாதுகாப்புக்காகக் கடந்த பெப்ரவரி மாதம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டன.

அடகு வைத்தவர்களில் ஏழை-நடுத்தர விவசாயிகளும் அடங்குவர்.

வாடிக்கையாளர்கள் தங்கள் நகைகள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டதையிட்டுப் பீதியடைந்து அடகுவைத்த நகைகளே மீளப் பெறுவதற்காகத் தமது காணிகளே ஈடுவைத்தும் மற்றும் சொத்துடைமைகளே விற்றும் வட்டியுடன் பணத்தை உரிய வங்கிகளில் செலுத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து வங்கி முகாமையாளர்கள் கொழும்பு சென்று அடகுப்பணம் செலுத்தியவர்களின் நகைகளே மீண்டும் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கான ஒழுங்கு முறையில் நகைகளேத் தயார் செய்துவிட்டு வந்தனர். ஆனல் பல மாதக்கணக்காகியும் நகைகள் உரியவர்களுக்கு வந்துசேரவில்லே.

மக்களால் வங்கிகளில் முதல் நாள் அடகுவைக்கப்பட்ட நகைகளே அடுத்த நாள் அவர்களால் மீட்கபபடும்போதுகூட ஒரு மாத வட்டியே அறவிட்டு வந்த வங்கிகள் பணம் செலுத்திப் பல மாதங்களுக்குமேலாகியும் செலுத்திய பணத்துக்கு வட்டி வழங்குமா? என்று கேட்கிருர்கள் வாடிக்கையாளர்கள்.

இதற்குப் பொறுப்பாகவுள்ள வங்கிகளின் பிராந்திய முகாமையாளர்கள், பணம் செலுத்திய வாடிக்கையாளர்களின் நகைகளேக் கையளிப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லே என்றும் அவர்கள் கவலே தெரிவிக்கிருர்கள்.

நகைகளே அடகுவைத்துள்ள வாடிக்கையாளர்களின் கஷ்ட நிலேமைகளே அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறியாவது நகைகளே மீட்டெடுத்துப் பாதுகாப்பு வசதிகளுடன் திறக்கப்பட்டுள்ள குருநகர் வங்கி (இராணுவ முகாம் முன்னிலேயில்) களில் வைத்து வழங்குவதற்குப் பிராந்திய முகாமையாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வாடிக்கையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (மா)

## கைதடி முகாம் அகதிகள் வீடமைப்பு திட்டங்கள்!

### யாழ். செயலகத்தில் ஆராயப்படும்

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருக்கின்ற அகதிகளுக்கென ஆரம்பிக்கப்பட்டுள்ள மறவன்புலோ கெற்பேலி வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பான விடயங்களே ஆராயும் பொருட்டு இன்று திங்கட்கிழமை, யாழ் செயலகத்தில் ஒரு கூட்டம் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்துக்கான அத்தியாவசிய சேவைகள் உதவி ஆணையாளர் திரு. எஸ். தர்மபாலனின் ஏற்பாட்டின் பேரில் நடைபெறவுள்ள இக்கூட்டம் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தலேமையில் இடம் பெறும்.

இக்கூட்டத்திற்குச் சங்கைக்குரிய சகோதரி செல்வி மரிய ரேசா, அலவழிப் போராட்டக் குழுவைச் சேர்ந்த திருவாளர்கள் க. ஜீவகதாஸ், வீ. எஸ். துரைராஜா, அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தைச் சேர்ந்த திரு. எஸ். குணசேகரம், சமூகசேவைகள் உதவி அத்தியட்சகர் திருமதி சிவசிதம்பரம், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா, கணக்காளர் திரு. மரியநாயகம், உதவித் திட்டமிடல் அதிகாரி திருமதி ஞானேந்திரன், கைதடி அகதிகள் முகாம் இணைப்பாளர் திரு. பி. ஜே. அருள்நாயகம், திரு. ஸ்ரீகாந்தன் ஆகியோர் பங்குகொள்ளவுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

### காந்தி கொள்கை நடைமுறைகளே ஆராய

# அமெரிக்காவிலிருந்து இலங்கைவரும் 10 பேர்குழு!

(க. ஜீவகதாஸ்)

மகாத்மா காந்தியினுடைய சிந்தனைகளும், கொள்கைகளும் எவ்வாறு இந்தியாவிலும், இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை அறியும் பொருட்டு அமெரிக்காவில் இருந்து பத்துப் பேர் கொண்ட குழுவொன்று அடுத்த வாரம் இலங்கைக்கு வரவிருக்கின்றது.

கலாநிதி திருமதி ஜோனு மேஸி தலேமையிலான இக்குழுவினர் தற்போது இந்தியாவில் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து காந்தீயப் பணிகளே நேரில் பார்வையிட்டு வருகின்றனர்.

அடுத்தவார முற்பகுதியில் இலங்கைக்கு வரவிருக்கின்ற இக்குழுவினர் மொறட்டுவையிலுள்ள சர்வோதய சிரமதான இயக்கத்தின் தலேமைப் பணியகத்திற்கும் அதனைத் தொடர்ந்து சர்வோதய இயக்கத்தினரால் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்களேப் பார்வையிடுவார்களெனவும் அறியப்படுகின்றது.

கலாநிதி திருமதி ஜோனு மேஸி, வாஷிங்டன் நகரைச் சேர்ந்த ஒரு பிரபல பெண் எழுத்தாளரும், பேராசிரியரும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பதில் நீதவானின் கார்

(மாவிட்டபுரம்)

மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஜி பி பாலசிங்கத்தின் காரைக் கடத்திச்சென்ற இளேஞர்கள் தாம் சொன்னபடி திருப்பிக் கொண்டுவந்து விட்டுச் சென்றுள்ளார்கள்.

திரு. பாலசிங்கம் வெள்ளியன்று நீதிமன்றத்துக்குச் சென்ற சமயம் காலே 9 மணியளவில் இரு இளேஞர்கள் அவரது காரைத் திருப்பித்தருவோமென்று கூறி கடத்திச் சென்றனர் என்றும் பின்னர் 11மணியளவில் கார் திருப்பிக்கொண்டு வந்து விடப்பட்டிருந்ததென்றும் தெரியவருகின்றது. இது பற்றி காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

### மக்கள் வங்கி அடகு நகைகள்:

## ஒருவாரத்திற்குள் நடவடிக்கை

[யாழ்ப்பாணப்]

யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளேகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளுக்குப் பணம் செலுத்தியவர்கள் விவகாரம் தொடர்பாக ஒருகிழமைக்குள் நடவடிக்கை எடுக்கப்படுமென்று மக்கள் வங்கிப் பொதுமுகாமையாளர் யாழ். அரசாங்க அதிபர் திரு, எம். பஞ்சலிங்கத்திடம் தெரிவித்தார்.

இவர்கள் செலுத்திய தொகைக்கேற்ப கடன் வசதியளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் மக்கள் வங்கிப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக யாழ். அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கம் மக்கள் வங்கிப் பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டிருந்தார். [வெ]




# புளியங்குளத்தில் பல்தொழில் நுட்பநிறுவனம்

## உலகவங்கி உதவியுடன் 85ல் உதயம்

(கொழும்பு)

உலகவங்கியின் உதவியுடன் புளியங்குளத்தில் அடுத்தாண்டில் பல்தொழில்நுட்ப நிறுவனம் ஒன்று அமைக்கப்பட உள்ளது.

ஒருகோடியே 85லட்சம் ரூபா செலவில் கட்டப்பட இருக்கும் இத் தொழில்நுட்ப நிறுவனம் கிளிநொச்சி, மன்னர், வவனியா, முல்லேத்தீவு மாவட்டங்களேச்சேர்ந்த மாணவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக இருக்கும், என திட்ட அமுலாக்கல் அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி ஏ. எஸ். குணசிங்கம் தெரிவித்தார்.

கிராமிய ஒருங்கிணைப்புத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட இருக்கும் இந் நிறுவனத்திற்கென 25 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது கட்டிடங்கள் 10ஏக்கர் காணியில் அமைக்கப்பட உள்ளன.

ஆங்கிலம், தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, மோட்டர் திருத்துதல், சண்ணே இயந்திரவியல், தச்சுத்தொழில், மேசன் தொழில் ஆகிய துறைகளுக்கான பயிற்சிகள் இந் நிறுவனத்தில் அளிக்கப்படும்.

## விசேஷ பஸ்சேவை

(யாழ்ப்பாணம்)

தபாலகங்களில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்கு குருநகர் மக்கள் வங்கிக்கிளேயில் 15ம் திகதி தொடக்கம் ஓய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனுல் குறித்த திகதிகளில் காலே 8மணிமுதல் பிறபகல்வரை விசேஷமாக 4 பஸ்களே குருநகருக்கு விசேஷ சேவையிலீடுபடுத்த போக்குவரத்து சபையினர் இணங்கியுள்ளனர்.

15, 16, 17, 18, 19, ஆகிய திகதிகளில் காலே 8-30 மணிமுதல் பி.ப. 1-30 மணிவரை இந்த ஓய்வூதியம் வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே.

## செக். கவிஞருக்கு நோபல் பரிசு

(ஸ்டொக்கோம்)

இலக்கியத்துறையில் 19'4ம் ஆண்டுக்கான நோபல் பரிசு செக்கோசிலவாக்கியா நாட்டைச் சேர்ந்த 84 வயது நிரம்பிய கவிஞர் 'செய்போர்ட்' என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## ஏர் சின்னத்துடன் சுவரொட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சிவப்புமையினுல் இரண்டாகப் பிரித்து வரையப்பட்ட இலங்கைப்பட சுவரொட்டிகள் காணப்படுகின்றன

உழவர்களின் ஏர் சின்னத்துடன் காணப்படும் இச் சுவரொட்டிகளில் ''நாம் ஈழவர் - எமது மொழி தமிழ் - எம்நாடு ஈழம்'' என்ற வாசகம் அச்சிடப்பட்டுள்ளது. (மா)

## மாணவர் நிலே இன்று ஆலோசனே

(யாழ்ப்பாணம்)

யாழ். பெற்ருேர் சங்கத்தினர் இன்று பிற்பகல் கூடிபாடசாலே மாணவர்களே எதிர்நோக்கியுள்ள பிரச்னேகள் குறித்து ஆலோசனே நடத்தவுள்ளன.

யாழ். ஜும்மா மொஸ்க் லேனிலுள்ள வட இலங்கை ஆசிரியர் சங்கப்பணிமனேயில் இவ்வாலோசனேக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி மாணவர்களின் நலன் விரும்பிகளும், பிரஜைகள் குழுக்களுக்கும் அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளன (மா)

### மணிவாக்கு

கற்பு, கட்டுப்பாடுகளில் மிகப்பெரியது. அது இல்லாதுபோனுல் வேண்டிய உறுதியை மனம் அடையாது. கற்பில்லாதவன் தாக்குப்பிடிக்கும் சக்தியை இழந்துவிடுகிருன். ஆண்மையை இழந்து கோழையாகிவிடுகிருன்.

—மகாத்மா காந்தி

## நமதுநோக்கு

# மனிதாபிமானம் மிக்க மக்கள் பணி

"எவர் தங்களுக்காக மட்டும் சமைக்கின்ருர்களோ அவர்கள் உண்மையில் பாவத்தையே புசிக்கிருர்கள்'' என்று ஆணித்தரமாகக் கூறுகிறது கீதை சமதர்ம சமுதாயம் அமைப்பதற்கு இதைவிடப் புரட்சிகரமான கருத்து வேறு எங்கேயாவது இருக்கமுடியுமா?

பேக்கரிப் பாணில் காலம் விடும் மக்கள் இன்று பலர்: அதற்கும்வழியில்லாமல் பட்டினி கிடப்பவர் இன்னும் அதிகம். ''கீதைகூறுவதுமக்கள் அரிசியை உலையிலிட்டுச் சமைக்கும் வழக்கம் சாதாரணமாயிருந்த காலம்'' என்ற கேலி இன்று கிளம்பும்.

கீதையின் தத்துவம் இலகுவில் விளங்கி விடுமென்று நாம் கருதியிருந்தால் இவ்வித கேலிக்கு இடமிராது.

கீதை பிறந்த பாரதத்திலும் அது பரவியிருக்கும் அண்டை நாடுகளிலும் ஏன் இன்று இவ்வளவு வறுமையும் ஏழைமையும் நீடிக்கின்றன. நாம் கீதையைப் பற்றிப் பேசுகிருேமே தவிர அதன்படி வாழ முற்படவில்லை.

மேனுடுகளின் நாகரிக வாழ்வை நாம் சாடவேண்டிய சந்தர்ப்பம் சில வேளைகளில் உண்டு. ஆனுல் அவர்கள் மனித வாழ்க்கைத் தத்துவத்தை - கீதை கூறும் பேருண்மையை நடைமுறையில் கடைப்பிடிக்கின்றன. ஏன் தூரகிழக்கில் உள்ள ஜப்பான்கூட செல்வத்தில் ஜெர்மனியைப் போன்றிருக்கிறது.

மேனுடுகள் செழிப்பிலும் முன்னேற்றத்திலும் உச்சத்தில் இருக்க நாம் சீனிக்கும் மாவிற்கும் கியூக்களில் மணிக்கணக்கில் தவம் கிடக்கிருேம்.

இந்த நிலையில் நாம் திண்டாடிக் கொண்டிருக்கையில் சர்வலோகமுமே இன்றைய தினத்தை (அக்டோபர் 15) விழியற்ருேருக்கு வழிகாட்டும் தினமாகக்கொண்டாடுவது பலனளிக்குமா? என்று வாதாடும் வீணர் எம்மத்தியில் உண்டு.

1981ல் உலகத்திலுள்ள நாடுகள் எல்லாம் அந்த ஆண்டை ஊனமுற்ருேர்கள் ஆண்டாகக் கொண்டாடின.

ஆண்டவனை நம்புகின்றவரென்ருலென்ன ஆண்டவனை நம்பாதவரென்ருலென்ன மனிதாபிமான உணர்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டிய கடமையே நாம் ஊனமுற்ருேர்களுக்கு உதவும் கடமை.

கண்ணுள்ளவர்களில் பலர் கபோதிகளாக இருக்கின்றனர். கண்ணில்லாதவனே இன்று கண் இருக்கின்றவனை விடக், கல்வியறிவு மிக்கவனுக இருக்கின்ருன்.

உலகில் மிகச்சிறந்த சங்கீத விற்பன்னர், புலவர்கள், நூலாசிரியர்கள், பேராசிரியர்கள் கண் பார்வையற்றவரென்பதை நாம் மறுத்தலாகாது.

ஆங்கிலப் பெரும் புலவர் மில்தஞர் தமது இரு கண்களை இழந்த பின்னரே சுவர்க்கத்தைப் பார்க்க முடிந்தது என்று பிரபல ஆங்கில விமர்சகர் ஒருவர் கூறுகின்ருர். ஹெலன்கெல்லரின் கல்வித் திறனும் அவர் எழுதிய நூல்களின் பெருமையும் கண்ணுள்ள பலர் நினைக்கமுடியாத சாதனைகள்.

ஊனமுற்றவர்களின் கதி-அவர்களால் என்ன செய்யமுடியுமென்ற அவநம்பிக்கை இன்று மலையேறிவிட்டது.

கண் இல்லாதவர்களுக்கு கண் பார்வை, காலில்லாதவர்கள் மிகத்திறமையாக வாழும் சக்தி, செவிப்புலன் அற்றவர்களுக்கு கேட்கும் கருவி - இவர்களெல்லாம் சிறந்த அறிஞர்களாக வாழமுடியுமென்பதை மருத்துவர்கள் நிரூபித்துக்கொண்டிருக்கிருர்கள்.

கண்ணற்றவர்கள், ஒரு புத்தகத்தை நீட்டினுல் அதைத் தடவிப்பார்த்து, அதிலே என்ன எழுதியிருக்கிறது என்று படித்துச் சொல்லுகின்ற ஆற்றலை இன்று பெற்றிருக்கின்றனர்.

வலதுகுறைந்தவர்களை வாழவைக்கும் பரோபகாரம் மருத்துவத்துறை நிபுணர்களின் அற்புத ஆராய்ச்சிகளால் விருத்தியடைகின்றது காக்கும் கடவுளாக மருத்துவ நிபுணர் குறிப்பாக மேனுட்டில் இன்று உருவாக்கிய விசேட சிகிச்சைநிலையங்கள் மூலம் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

இதன்பயனுக இந்தியாவிலும் இலங்கையிலும் இவ்வித பரோபகாரத்துக்கு வழிபிறந்திருக்கிறது.

ஊனமுற்ருேருக்கு உரிய நிபுண வைத்தியம் இப்படிப்பட்ட முயற்சிகளில் மனிதசமுதாயத்தை தீவிரமாக ஈடுபடுத்துவதே இன்றைய தினத்தின் முக்கிய நோக்கம்.

மருத்துவமனைகள், மருத்துவ நிபுணர்களைவிட, இவற்றிற்குப் பொறுப்பான தொண்டு, ஸ்தாபனரீதியாக இயங்க வேண்டுமென்பதை மக்கள் உணரவேண்டும். ஆலயங்கள், பாடசாலைகள், தொழில்நிலையங்கள், இவ்விதசேவையில் முக்கிய பங்குகொள்ளவேண்டும்.

பலர் சேர்ந்து ஒன்றை நினைத்தால் அது நிச்சயம் நடக்கும். எண்ணங்கள் அபார சக்திவாய்ந்தவை.

மனிதாபிமானம் மிக்க மக்கள் நலப்பணி இதைவிட மேலானதுண்டா?

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு

## கம்யூ. கட்சி(இடது) சிலயோசனைகள்

(யாழ்ப்பாணம்)

'தமிழ் ஈழம்' என்னும் பிரிவினைக் கோரிக்கையின் மூலம் நாட்டிற்கு ஏற்படவுள்ள ஆபத்தை எமதுகட்சி பூரணமாக உணர்கிறது. அதனுலேயே தேசிய சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ள இனப்பிரச்சினையின் தீர்வை எமது கட்சிவற்புறுத்துகிறது.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள, பிரசுரமொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அப்பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் இருபத்தைந்து வீதத்தை உள்ளடக்கும் சிறுபான்மையின மக்களில் தமிழ்பேசும் மக்கள் முப்பத்தைந்து லட்சம் எண்ணிக்கையுடையவர்கள். இத்தமிழ் பேசும் மக்களில் இலங்கைத் தமிழர், இந்திய வம்சாவழித் தமிழர், தமிழ்பேசும் முஸ்லிம் மக்கள் ஆகிய மூன்று பிரிவு மக்கள் உள்ளடங்குவர். இத்தமிழ்பேசும் மக்கள் நாட்டின் வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பிரதேசங்களில் செறிந்து கூடுதலாகவும், ஏனைய பகுதிகளில் பரவலாகவும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் பொருளாதார முயற்சிகள், மொழி, கல்வி, கலாசாரம் போன்றன இப்பிரதேங்களில் தமிழர்களால் வளர்க்கப்பட்டு வந்துள்ளன. பிரதேசம், பொருளாதாரம், மொழி, கலாசாரம் என்ற நான்கு அம்சங்களையும் கொண்டு பார்க்குமிடத்து வடக்கு கிழக்கில் வாழ்ந்து வரும் தமிழர்களைத் தனித் தேசிய இனமாகக் கொள்ள முடியும். அதேவேளை ஒரே மொழிபேசும் காரணத்தால் முஸ்லிம் மக்களையும் இந்திய வம்சாவழித் தமிழ் மக்களையும் தமிழ்த் தேசிய இன வரையறைக்குள் வலிந்தோ அன்றி மேலோட்டமாகவோ இணைத்து விடமுடியாது. இந்தியவம்சாவழித் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் சிறுபான்மையினப் பிரிவுக்குள் அடங்குவர். தனித் தேசிய இனமாக உள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களில் கூட மூன்றில் ஒரு பங்கினர் ஆண்டாண்டு காலமாக 'தீண்டத் தகாதவர்' என்றும் அண்மைக்காலமாக 'சிறுபான்மை தமிழர்' என்றும் அழைக்கப்பட்டு வருகின்றனர். இப்பகுதியினரது வளர்ச்சியும் தனிச் சிறுபான்மைப் பிரிவு போன்று கணிக்கப்பட்டு விசேஷ சலுகைகள் வழங்கப்படுவது அத்தியாவசியம்.

இலங்கையின் பிரத்தியேகமான சூழ்நிலைகளின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேச சுயாட்சி அமைப்புகளையும், சுயாட்சி உள்ளமைப்புகளையும் உருவாக்குவதன் மூலம் இனப் பிரச்சினையின் தீர்வுக்கு நம்பிக்கை அளிக்கமுடியும்.

தமிழ் மக்கள், தமது பாரம்பரிய பிரதேசங்களில் இப் பிர பிரதேச சுயாட்சி அமைப்பு முறையில் கீழ் தமது பொருளாதார, குடியேற்றம், நிலப் பங்கீடு அரசியல், கல்வி, கலாச்சார வேலைவாய்ப்பு போன்ற சகலதையும் தாமே வளர்த்து முன்னேறமுடியும்.

இப் பிரதேச சுயாட்சி அமைப்பினுள் உள்ள தாழ்த்தப்பட்ட 'சிறுபான்மைத் தமிழர்கட்கு' விசேட சலுகைகள் வழங்கப்பட்டு அவர்கள் சந்ததி சந்ததியாகப் புறக்கணிக்கப்பட்ட நிலையிலிருந்து மீட்சி பெற உத்தரவாதம் வழங்க வேண்டும். அதேவேளை முஸ்லீம் மக்களும் தமதுபகுதிகளில் சுயாட்சி உள்ளமைப்புக்கள் மூலம் தனது தனித்துவத்தைப் பாதுகாத்து முன்செல்ல மலையக இந்திய வம்சாவழித் தமிழ் மக்கள் தமது நீண்டகாலப் போராட்டங்களின் வாயிலாகப் பெற்றுவரும் பிரஜாவுரிமையை வெறுமனே வாக்களிப்பதற்கான ஒன்ருக மட்டும் பிரயோசிக்க முடியாது. அவர்களுக்கு இலங்கை பிரஜைகளைப்போன்று நிலமும் வேலை வாய்ப்பும், கல்வியும் இதர உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். அவற்றுடன் அவர்கள் தங்களை வழிநடத்துவதற்கேற்ற பிரதேச அமைப்புக்களை நிறுவி அவர்களது சுதந்திர வாழ்விற்கு உத்தரவாதம் வழங்கப்படல் வேண்டும்.

இவ்வாறு நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ், முஸ்லீம் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப் படுவதுடன் தமிழ் மக்களின் மத்தியில் வாழும் சிங்கள, முஸ்லீம் மக்களின் உரிமைகளுக்கும் உத்தரவாதம் வழங்கும் வகையில் பிரதேச சுயாட்சி அமைப்பினுள் சுயாட்சி உள்ளமைப்புகள் உருவாக்கப்படவேண்டும்.

இவ்வாறு பிரதேச சுயாட்சி முறையைநடைமுறைப்படுத்தி சகல இனங்களினதும் ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் உறுதிப்படுத்தி பலமான ஒரு ஜனநாயக இலங்கையை உருவாக்குவதே இன்றைய அவசிய கடமையாகும். (க)

## நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற

# திருமுறை முற்ருேதல் கால்கோள் விழா

மக்களது மனம் சாந்தியுற்றுத் திருவருட்பெருக்கோடு நிறைவு பெற்றுத்திகழவேண்டுமென்ற பெருநோக்கில்சென்ற செவ்வாய்க்கிழமை புரட்டாதிப் பூரணை (9-10-84) அன்று நல்லை திருஞானசம்பந்தர்ஆதீனத்தில் சைவத் திருமுறை முற்ருேதலுக்குக் கால்கோள் விழா எடுக்கப்பட்டது. நல்லூர் கமலாம்பிகா சமேத கைலாசநாதசுவாமி திருக்கோயிலில் நடராஜப்பெருமானின் திருவடிக்கீழ் பன்னிரு திருமுறைச்சுவடிகள் வைக்கப்பட்டு ஆராதனைகள் செய்யப்பட்டபொழுது குருமகாசந்நிதானம் அவர்கள்முற்ருேதலுக்கென்று சங்கப்பித்துக் காப்புக்கட்டிக்கொண்டார்கள். மகளிர் அட்டமங்கலங்கள்ஏந்திவர அடியார்களின் ஹரஹர ஒலியுடன் மங்கள வாத்திய இசையுடனும் திருமுறைச்சுவடிகள் அலங்கரித்த பீடத்தில் திருவுலாப்போந்து மகரதோரணங்களாலும் மலர்க்கோலங்களாலும் பூரணகும்பம் முதலியவற்ருலும் அலங்கரிக்கப்பட்ட ஆதீனமண்டபத்தை அடைந்தப்பாது அணங்கினர் ஆராத்தி சுற்றினர்.

**மு. தியாகராசா**

திருமுறைகள் ஆதீன பூஜை மண்டபத்தில் வைக்கப்பெற்று பூசை செய்யப்பட்டபின் நல்லை ஆதீன குருமகாசந்நிதானம் அவர்கள் குத்துவிளக்கேற்றித் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் அருளிய முதலாம் திருமுறையில் முதற்பதிகதிதை ஓதி முற்ருேதலைத் தொடக்கிவைத்தருளினுர்கள். ஒவ்வொரு பதிகத்தின் வரலாற்று விளக்கத்தின்பின் விபூதி, உருத்திராக்கம் அணிந்து சிவப்பொலிவுடன் விளங்கிய அடியார்கள் ஒருவர் பின் ஒருவராகப் பண்ணுர்ந்த திருப்பதிகங்களைப் பக்தியுடன் ஓதினுர்கள். கோயில்களிலும் திருவருட் குறிப்புத்தோன்றிய இடங்களிலும் நாயன்மார்களாலும் அருளாளர்களாலும் அருளிச் செய்யப்பட்ட திருமுறைகள் அவர்களாலும், அவர்கள் திருக்கூட்டத்தாராலும் மடாலயங்களில் திரும்பத் திரும்ப ஓதப்பட்டன என்கிறது வரலாறு. அந்தப் பாரம்பரியத்தைக் கைவிடாது போற்றவேண்டும் என்று குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளம்பற்றியமை சைவமக்களின் தவப் பேறேயாகும். அன்று பூஜை மண்டபத்தில் ஆண்களும், பெண்களுமாக நிறைந்து வழிந்த திருக்கூட்டத்தினர் புளகாங்கிதராய் கண்களில் ஆனந்த அருவி பெருக, மெய்மறந்து திருப்பதிகங்களில் திளைத்தநிலை ஒவ்வொரு சைவரும்பெறவேண்டியதொன்றே. அன்றைய ஓதல் உச்சிக்காலத்தோடு நிறைவுற்றபின் மாகேசுர பூசை நிகழ்ந்தது. இந்த முற்ருேதல் தொடர்ந்து ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 5மணி வரை நிகழும் என்பதும் ஒவ்வொரு திருமுறை ஓதத்தொடங்கும் நாட்களில் மாகேசுர பூசை நடைபெறும்என்பதும் தெய்வசித்தம். திருமுறைஓத விரும்பும் அன்பர்களும் சமுகமளிக்க விரும்பும் அடியார்களும் ஆதீனம் வந்து ஆம்வழி ஒழுகி உய்தி பெறுவார்களாக.

## இன்று

(கல்வியங்காடு)

'அறிவொளிக்கலை' யின் 81 வது இதழ் வெளியீட்டு விழா இன்று அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய சிறுவர் மண்டப அரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிலையத்தின் ஆங்கிலக்கல்வி ஆசிரியை செல்வி தி.சுகந்தி தலைமையில் நடைபெறும் விழாவில் திரு சி.சிவதாசன் திரு. ஐ. சண்முகலிங்கம் ஆகியோர் கையெழுத்துப் பத்திரிகைகளின் வளர்ச்சி பற்றி உரை நிகழ்த்துவார்.

பாஸ்போர்ட்

## மத்திய கிழக்கிற்கு தனிப்பகுதி

(கொழும்பு)

கொழும்பு (பாஸ்போர்ட்) கடவுச்சீட்டு அலுவலகத்தில் மத்தியக்கிழக்கிற்குப் போகிறவர் ளுக்கென தனியான கவுண்டர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மத்தியக்கிழகில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்பவர்களுக்குத் தாமதமின்றி கடவுச்சீட்டுகள் கிடைக்க உதவும் பொருட்டே புதிய கட்டுப்பாட்டில் திரு. சி. டபிள்யு. சிறிவர்தன இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

இந்தக்கவுண்டரில் 5 பகுதிகள் செயற்படுகின்றன. மத்திய கிழக்கு செல்வதற்கான கடவுச்சீட்டுக்கு விண்ணப்பங்களை இப்பகுதியில் ஒப்படைக்கலாம் இப்பகுதி பகல் போசனவேளையிலும் மூடப்படாமல் இயங்கும் என்று தெரியவருகின்றது.

## அடையாள அட்டைக்கான

# 25,000 விண்ணப்பப் பத்திரங்கள் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை!

[யாழ்ப்பாணம்]

அடையாள அட்டை பெறுவதற்கான 51,000 விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. இவற்றில் சுமார் 25,000 பத்திரங்கள் பூர்த்தி செய்து திருப்பி ஒப்படைக்கப்படவில்லை.

யாழ் அட்டைகளைப் பதிவுசெய்யும் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திரு வி இராசையா நேற்று மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: அடையாள அட்டைக்கான விண்ணப்பப்பத்திரங்கள் உதவி அரசாங்க அதிபர்களுக்கும், கல்லூரி அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. பெருந்தொகையான பத்திரங்கள் இன்னும் பூர்த்திசெய்து ஒப்படைக்கப்படவில்லை. உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலோ, கிராமசேவகர் காரியாலயத்திலோ, அல்லது கல்லூரி அதிபர் காரியாலயத்திலோ இப்பத்திரங்கள் இருக்கக்கூடும். இவற்றை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது யாழ். ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தில் போதியளவு விண்ணப்பப்பத்திரங்கள் கைவசம் உண்டு. தேவைக்கான காரணம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த ஜூன், ஜூலைமாதம் இக்காரியாலயம் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களுக்கான அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துவிட்டன. அவை தற்போது வழங்கப்பட்டுவருகிறது.

சாதாரண விண்ணப்பம் உதவி அரசாங்க அதிபர் மூலம் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும். அவசரவிண்ணப்பங்கள் நேரடியாக விண்ணப்பதாரருக்குக் கிடைக்கும்.

ஜி. சி. ஈ. (சாதாரணதரம்) மாணவர்களின் அடையாள அட்டைகள், அந்தந்தக்கல்லூரிகளுக்கு அனுப்பப்பட்டுவருகின்றன. விண்ணப்பங்கள் தாமதமாக அனுப்பப்பட்டிருந்தால், மாணவர்களின் அடையாள அட்டைகளும் தாமதமாகவே கிடைக்கும். எப்படியிருந்தபோதிலும் பரீட்சைக்குமுன்னதாக அடையாள அட்டை கிடைத்துவிடும். [க]

# பிறப்புப் பத்திரம் கேட்போர் தொகை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பிறப்பு அத்தாட்சி பத்திரத்திற்கு விண்ணப்பம் செய்வோர் தொகை அதிகரித்துள்ளது

இதுவரைகாலமும் தினமும் 400 ஆக இருந்ததொகை 500 ஆக அதிகரித்துள்ளது.

யாழ் பதிவுகந்தோரில், 700 0பிறப்பு அத்தாட்சிபத்திர விண்ணப்பங்கள் இருப்பதாக யாழ். பிரதிபதிவாளர் திரு. எல். இராசையா தெரிவித்தார்.

பிரதிபண்ணும் யந்திரம் கொள்ளையடிக்கப்பட்டதை தொடர்ந்து, தினமும்கையால் எழுதியே, பிறப்புஅத்தாட்சி பத்திரங்கள் வழங்கப்பட்டு வந்தன.

தற்போது 3 வாரத்திற்குரியா விண்ணப்பங்கள், தேங்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்

இதேசமயம், இதற்கு தேவையான கடுதாசி இல்லாததினால், பிறப்புஅத்தாட்சி பத்திரம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதால் மேலும் நிலைமை மோசமடைந்துள்ளது. (க)

## தமிழீழ தீவிரவாதிகள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழ் தீவிரவாதிகள் இந்தியாவில் தஞ்சம் புகுந்திருப்பதாக எதிர்க்கட்சித்தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்த கருத்து தொடர்பாகவே திரு சத்வால் வெளியுறவு அமைச்சரைச் சந்தித்து இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

''இலங்கையிலுள்ள எந்த அரசியல் கட்சி பற்றியும் இந்தியாவுக்கு எதுவித அக்கறையும் கிடையாது. எல்லாக் கட்சிகளையும் ஒரே கோணத்தில் தான்இந்தியா நோக்குகிறது'' என்றும் அவர் அமைச்சரிடம் தெரிவித்தார்.

## சார்ஜன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொன்றனர் என்று கூறப்படுகிறது.

சார்ஜண்ட் கே. ஆரியவன்ச என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

''ஏன்ஸ்டபிள் ஒருவருடன் வீதியில் வாகனங்களை சோதனையிட்டுக் கொண்டிருந்த போது அவ்வழியே வந்த வான் ஒன்றை மறிதத போது வானில் இருந்தவர்கள் சுட்டுவிட்டு தப்பி ஓடிவிட்டதாகக் கூறப்படுகிறது

இச்சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வான் பின்னர் அநாதரவான நிலையில் மீட்கப்பட்டது.

## வடக்கில் நான்கு ..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

நம்புக்கணையில் நேற்று முன்தினம் நடைபெற்ற 95 வது மாஹாபொல சந்தையின் இறுதிநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர்அங்கு தொடர்ந்து பேசுகையில் ''இந்தியாவிலிருந்து பயிற்சி பெற்ற தமிழ் தீவிரவாதிகள் ஆயுதங்கள் சகிதம் காங்கேசன்துறை வழியாக வடபகுதியை அடைகின்றார்கள். இதனைத் தடுப்பதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கைகளும் எடுக்கும்'' என்றார்.

வடபகுதி மீனவர்கள் தமது தொழிலைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு கடற்பிரந்தியத்தில் அவர்களுக்கு குறிப்பிட்ட இடமொன்று ஒதுக்கப்படும் என்றும் வடபகுதியில் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்ந்து இருக்கும் வரை இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகளும் இருக்கும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

## கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் நீரிழிவு (சலரோகம்) நோய் பற்றிய கருத்தரங்கு ஒன்றை பண்டத்தரிப்பில் அடுத்த மாதம் 4ம்திகதி நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## காரைநகர் சீ–நோர் பிரச்னை

# ஊழியர் இடமாற்றத்தை ரத்துச்செய்ய வற்புறுத்து

[காரைநகர் நிருபர்]

''காரைநகர் சீநோர் அபிவிருத்தி நிறுவனத்தில் படகு கட்டும் பகுதியில் கடமையாற்றி வந்த ஐந்து ஊழியர்கள் நிர்வாகத்தினால் ஒருநாள் முன் அறிவித்தல் கொடுத்து மட்டக்குளி படகு கட்டும்பகுதிக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டனர். சாதாரணமாக ஒரு இடமாற்றம் செய்யப்பட வேண்டுமானால் கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். தொழிலாளி தனது குடும்பத்தைப் பாதுகாக்க சகல ஏற்பாடுகளும் செய்ய வேண்டும். ஆனால் இந்த இடமாற்றத்தில் இவை எதுவுமே கவனிக்கப்படவில்லை.''

இந்த இடமாற்றத்தை எதிர்த்து கைத்தொழில் பொதுத்தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ள ஆட்சேபனையில் இவ்வாறு தெரிவித்துள்ளது

யாழ் உதவித் தொழில் ஆணையாளர் இது சம்பந்தமாக ஒருமகாநாட்டைக் கூட்டினர். நிர்வாகம் விட்டுக் கொடுக்காமையால் மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது. நாட்டில் தற்பொழுது நிலவி வருகின்ற பதற்ற நிலையை மனதில் வைத்து இந்த மாற்றங்கள் ரத்துச் செய்யும்படி தொழிற் சங்கம் வற்புறுத்துகின்றது.

## வரப்பெற்றோம்

சைவசித்தாந்த திருச்சபையின் வெளியீடான திருநெறி மபத இதழின் ஓராண்டு நிறைவு மலரும் சைவசமயம் என்னும் சிறுபிரசுரமும் வெளிவந்துள்ளன. உண்மையான சைவ மக்களைத் திருப்திப்படுத்தும் வகையிலும் தன்னைக் கற்போருக்கு சரியான பல சைவ உண்மைகளைப் புகட்டுவதோடு அவர்களுக்கு மன அமைதியையும் கொடுக்கும் பண்புடன் திருநெறி ஆண்டுமலர் விளங்குகின்றது.

''தியானமூலம் சிவபெருமானின் அகண்ட சக்தியை நம்முள்ளே எழச்செய்கின்றோம். இது பரிசுத்தமான வல்லமை பொருந்திய பேரின்ப சக்தியாகும்.

இந்நிலையில் முன்பு இல்லாத வாய்ப்புக்கள் திறபடும். சாதாரணமாக நல்லாகப் பழகாதவர்கள்கூட உங்களோடு இனிமையாக நடப்பவர்கள். வாழ்க்கை சீரடையும். மானசீகமாக சிவன் திருவடி நீழலே தஞ்சமென்றிருப்பதால் இவையும் இன்னும் பலவும் பெறுவீர்கள்'' என்பன போன்ற அருள்மொழிகள் - உபநிடத வாக்கியங்கள்-திருமுறை ஓதல் முதலிய கட்டுரைகள் இம்மலரை அழகுபடுத்துகின்றன.

★ ★ ★

திருஞானசம்பந்தசுவாமிகள் அருளியதிருவெழுகூற்றிருக்கை என்னும் தேவாரம் சிறந்த தெளிவுரையுடன் வெளிவந்திருக்கின்றது. காரைநகர் தமிழ் வளர்ச்சிக்கழகம் தருமபுர ஆதீன ஸ்தாபகரான ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகளின் குருபூசை மலரிலிருந்து தொகுத்த இவ்வுரை கற்போருக்கு மயக்கம் தரும் பல தொடர்களுக்கு விளக்கம் செய்வதாய் உள்ளது. திருஞானசம்பந்தர் அருளிய தேவாரங்கள் முழுவதையும் பாராயணம்பண்ணும் பயனைத் தரவல்லது என்ற பெருமை இத்தேவாரத்துக்குச் சொல்லப்படுகிறது. இதன் பெருமையைக் கேள்வியுற்று பாராயணம் செய்வோருக்கு இந்நூல் நல்ல பயன்தரும். (ப)

ந

## ரயில்- கார் விபத்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காயத்திற்குள்ளான டபிள்யூ. இ. ஜயவர்த்தன (42 வயது) வி. கமலநாதன் 35 வயது, கே புஸ்பராசா, 28 வயது, சி. விவேகானந்தன் (45 வயது) ஆகியோர் நேற்றுக்காலை யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மூவர் மயக்கமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவசரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

காயமடைந்த ஜெயவர்த்தனவுக்கு இடதுகை தோள் மூட்டு கழன்றுவிட்டதுடன், கால்களில்காயம் ஏற்பட்டுள்ளது.

பஸ்சாரதியான ஜெயவர்தன, இச்சம்பவம்பற்றி என்னிடம் தெரிவிக்கையில், உரும்பராயிலிருந்து நேற்றுக்காலை சாவகச்சேரிக்குவந்து, தேநீர் குடித்துவிட்டு புறப்பட்டபோது, மெக்கானிக்தன்னை வீட்டில் இறக்கிவிடும்படி கூறியதாகவும், அவரை இறக்குவதற்கு சங்கத்தானைக்கு சென்றபோது இவ்விபத்து ஏற்பட்டதாகவும் கூறினர்.

முன் ஆசனத்தில் மெக்கானிக்கும் சாரதியும் உரிமையாளரும் இருந்ததாகவும் அம்மூவருக்கும் பலத்தகாயம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். மெக்கானிக்கே கரை ஓட்டி வந்ததாகவும் அவர் கூறினர்.

சங்கத்தானை ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள பாதுகாப்புக்கதவு இல்லாத புகையிரத கடவையில், நாங்கள் சென்றகார் தாண்டிய போது ரயில் மோதியதாகவும் சம்பவத்தின் பின் ரயில் நிற்காமல் சாவகச்சேரிக்கு சென்று விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ரயில், வந்ததை சங்கத்தானை ரயில்நிலையம் மறைத்துவிட்டதால் எவரும் கவனிக்கவில்லை யென்றும் எல்லாம் ஒரு நொடிப்பெழுதில் நடந்து முடிந்து விட்டதாகவும் தெரிவித்தார். விபத்துக்குள்ளான மொறிஸ் கார் இரண்டாக பிளந்துள்ளது.

சாவகச்சேரி பொலிஸார் இச்சம்வம் பற்றி விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (க)

## பிரஜைகள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கலாநிதிகள் பாடசாலை அதிபர்கள் கலந்துகொண்டனர்.

இணைப்புக்குழு கூட்ட அமைப்பாளராக திரு. ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவுசெய்யப்பட்டார். (க)

## ஜனாதிபதிக்கு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விக்கப்பட்டுள்ளது,

அத்தந்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

பாதுகாப்பு என்ற போர்வையில் மாணவர்களுடைய கல்வி பலியிடப்படக்கூடாது. எனவே தாங்கள் உடனடியாக தலையிட்டு பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, மெதடிஸ்த மகளிர் கல்லூரி ஆகியவற்றை உடனடியாக வழமை போல் மாணவர் சென்று கல்வி கற்பதற்கு வழி வகுப்பதற்காக இராணுவ பொலிஸ் முகாம்களை அப்புறப்படுத்தும்படி பணிக்குமாறு இக்குழு கேட்டுக்கொள்கிறது.'' (க

## வல்வையில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தபோது அவ்வழியே வந்த ராணுவத்தினருடன் ஊர்வலத்தில் வந்த பெண்கள் பேசிக்கொண்டிருந்தபோது மாணவர்கள் பலத்த கோஷமெழுப்பினர் என்று கூறப்படுகின்றது.

இதற்கு முன்னர் மாணவர்களின் நான்காம்கட்ட உண்ணாவிரதத்தை வல்வை பிரஜைகள் குழுவினர் முடித்துவைத்தனர்.

## சீருடையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திறங்கியவர்கள் நேற்றுமுன் தினமிரவு நடத்திய ரகளையால் கிளிநொச்சிநகர் அல்லோலகல்லோலப்பட்டது.

நேற்றுமுன்தினமிரவு 7-45 மணிக்கு சீருடையில் வந்தவர்கள் வீதியில் மக்களைத்தாக்கியதுடன் ஆகாயத்தை நோக்கிச்சுட்டனர் இதனால் மோட்டார்சைக்கிள்களில் வந்தவர்கள்கூட அவற்றைவிட்டுவிட்டு ஓடினர். நகரில்மயான அமைதி நிலவியது.

இச்சம்பவத்தில் ஒரு மோட்டார்சைக்கிளை காணவில்லை என்றும், இன்னுமொன்று பலத்த சேதப்படுத்தப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. கரடிப்போக்குச் சந்திக்கு அருகிலுள்ள வீடுகளிலிருந்து மக்கள் வெளியேறியுள்ளனர்.

## நாவற்குழியில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களுடன், அங்கு பணியாற்றும் தூற்றுக்கு மேற்பட்ட யுவதிகள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஊழியர்களின் பரிதாப நிலையை விளக்கி அங்கு துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

அத்துண்டுப் பிரசுரத்தில், இத்துர்ப்பாக்கிய காரியத்தினால் எமது ஸ்தாபனம் இழுத்து மூடவேண்டிய நிலைக்கு தள்ளப்படலாம் என்றும் சகல ஊழியர்களும் வேலை இழக்க நேரிடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த ஸ்தாபனத்தின் உதவியோடு. பல்லாயிரம் கடற்றொழிலாளர்கள் இன்று எத்தனையோ கஷ்டங்கள் மத்தியில் தொழில் புரிந்து வருவதாகவும் இத்தொழிலாளரின் குடும்பங்களின் நிலை என்ன? என்றும் துண்டுப்பிரசுரத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை மீண்டும் எமது ஸ்தாபனத்திடம் கையளித்து எம்மை எமது வேலையைஇழக்கும் துர்ப்பாக்கிய நிலையிலிருந்து காப்பாற்றவும், என்று கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்களிடம் ஊழியர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

## தமிழக மீனவரை .,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள். ஆனால் இலங்கைக் கடற்படையினர் இந்திய பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்து அவர்களை கைது செய்ததோடு அவர்கள் இலங்கைக் கடற்பிராந்தியந்தில் மீன்பிடித்தவர்கள் என்றும் பொய்க்குற்றம் சுமத்தியுள்ளனர்.

''கைது செய்யப்பட்ட மீனவர்கள் முறைப்படி தலைமன்னாரில்தான் வைத்திருக்கப்பட வேண்டும். ஆனால் அவர்கள் அனுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது நியாயமில்லை. இந்த மீனவர்களின் குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்படுவதினால் இவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்றும் அந்தத்தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வடபகுதிக் கடலில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லலித் அத்துலத் முதலி சில பகுதிகளில் மீன்பிடிக்க அனுமதிஅளித்திருந்தார்.

ஆனால் தற்போது முழுப்பகுதியும் 'தடை'ப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது-

வடபகுதி மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு வேறொரு பிரதேசத்தில் வசதிசெய்து கொடுக்கப்படும் என்று அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

# இவர்களுக்கு கிராம மட்டத்தில் பயிற்சி நெறி

[சித்தன்கேணி]

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விசேடசேவை அலுவலர்கள், கிராமசேவை அலுவலர்கள், விவசாய உத்தியோகத்தர்கள், பயிர்செய்கை உத்தியோகத்தர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மட்டத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு கிராம மட்டத்திலான மூன்று நாள் பயிற்சிநெறி அச்சுவேலி கிராம பயிற்சிநிலையத்தில் நடைபெறவுள்ளது.

கிராம மட்டத்தில் அபிவிருத்தியில் உள்ள பொதுசன தொடர்பு, கிராம மட்டத்திலான செயல்பாடுகளில் உள்ள பிரச்னைகள், கிராம அபிவிருத்திக்கு சமூகபங்களிப்பை பெறுதலும், பங்குகொள்ளச் செய்தலும், திட்டங்களில் வெளிக்களத் தொடர்பு, பல்வேறு துறையிலான தொழில்களுடன் இணைதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட் திட்டமிடல் பணிப் ாளர் எஸ் சிவதாசன், விற்பனை திணைக்கள உதவி ஆணையாளர் திரு டி. வாமதேவன், கிராம அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் திரு பி. ஜே அருள்நாயகம் ஆகியோர் விரிவுரையாற்றவுள்ளனர்.

இப் பயிற்சிநெறியை இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர். கரவெட்டி, பருத்தித்துறை, கோப்பாய், நல்லூர் சாவகச்சேரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 30 பேருக்கு இம்மாதம் 29 ம், 30 ம், 31 ம் திகதிகளிலும் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 30 பேருக்கு நவம்பர் மாதம் 20 ம் 21 ம், 22ம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

## "ஒற்றுமை உயர்வுக்கு வழிகாட்டும்"

[ஊரெழு]

"இந்த ஆலயத்தை இவ்வளவுசிறப்பாக அமைப்பதற்கு நீங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு செயல்பட்டதுபோலவே ஒருவருக்கொருவர் அன்பு கொண்டு ஒற்றுமையாக வாழவும் முயற்சி எடுக்கவேண்டும். வாழ்வில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும், ஒருவரையொருவர் மதிக்கும் பண்புமே உயர்வுக்கு வழிகாட்டும் சிறப்பான அம்சங்களாகும்."

காங்கேசன்துறை ஊறணி புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்ற கலைவிழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசிய பங்குத்தந்தை அருட்திரு தேவராஜன் அடிகளார் மேற்கண்டவாறு கூறினர்.

ஊறணி அந்தோனியார் சனசமூக நிலையத்தின் முன்னுள் தலைவர் திரு தே. யோசெப் உட்பட மற்றும் பலர் விழாவில் கலந்துகொண்டு பேசினர்கள்.

மேற்படி தேவாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு அண்மையில் திறந்துவைக்கப்பட்டதைக் கொண்டாடும் வகையில் இடம்பெற்ற இக்கலைவிழாவில் மாணவிகளின் நடன நிகழ்ச்சியும், மஹாகவியின் "புதியதொரு வீடு" கவிதை நாடகமும், "கள்வனின் காதல்" நாட்டுக்கூத்து நாடகமும் இடம்பெற்றன.

# "தீவிரவாதத்தை தீர்க்கமுடியவில்லை எம்மை ஏன் திட்டுகிறார்கள்?"

## — சிறிமா கேட்கிறார்

[கொழும்பு]

"ஆணைப் பெண்ணுகவும் பெண்ணை ஆணுகவும் மாற்றுவதைத் தவிர வேறு எந்தக் காரியத்தையும் செய்துமுடிக்கும் சக்தியிருப்பதாகப் பிரசாரம் செய்துவரும் இன்றைய அரசாங்கத் தலைவர்கள் வடபகுதிப் பிரச்னையைத் தீர்த்து வைக்கமுடியாமல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஏன் திட்டித்தீர்க்கிறார்கள் என்பது புரிந்துகொள்ள முடியாமலிருக்கிறது" என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா இடம்கொட என்ற இடத்தில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி எகெலியகொட பிரமுகர் பி. டி. எதிரிசிங்க தலைமையில் இக் கூட்டம் நடந்தது.

"தமக்கு இருப்பதாகக்கூறிக் கொண்ட சக்தியைவைத்து இந்தப் பிரச்னையைத் தீர்க்காமல் நாடு படுகுழியில் விழும் வரை இருக்காமல் தெய்வத்தின் பேரால் பதவியிலிருந்து அரசு விலகிக்கொள்ளவேண்டும். மக்கள் தமக்கு விருப்பமான அரசொன்றைத் தெரிவு செய்துகொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்" என்று திருமதி பண்டாரநாயகா கூறினர்.

"இந்த அரசின்கீழ் இந்த நாட்டில் இப்போது சட்டம், ஒழுங்கு நடைமுறையிலில்லை. வடக்கில் தீவிரவாத அரசாங்கம் நடக்கிறது. கிழக்கில் அரச பயங்கரவாதம் நடைபெறுகின்றது. இலங்கைபற்றி உலக நாடுகளில் இருந்துவந்த நன்மதிப்பு இந்த அரசினல் நசமாக்கப்பட்டுவிட்டது. கொலைகாரர்களைப் பார்ப்பதுபோலத் தான் உலக மக்கள் எம்மைப் பார்க்கிறார்கள். பிரச்னைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்த்தோம். நாம் மத்தியஸ்தம் செய்தமையால்தான் இந்தியாவுக்கும் சீனுவுக்குமிடையே இன்றும் அமைதி நிலவுகின்றது. இந்த நிலைமையில் நமது நாட்டின் இறைமையையும் சுதந்திரத்தையும் காப்பாற்றிக்கொள்வதற்கு உள்ள ஒரேவழி பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி நாட்டு மக்கள் விருப்பப்படி புதிய அரசு ஒன்றை நிறுவ அனுமதிப்பது தான்" என்றார் திருமதி பண்டாரநாயகா.

திரு. அநுரா பண்டாரநாயகாவும் பேசினர்.

## வெள்ள நிவாரணம்

[சாவகச்சேரி]

கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக அழிவுகளை அறிவித்த குடும்பங்களுக்கு சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு கே. துரைராஜா வெள்ள அழிவு நிவாரண நிதியினை இப்போது கிராமம் கிராமமாகச் சென்று வழங்கி வருகின்றார்கள்.

தென்மராட்சி கிழக்குப் பகுதியிலே வெள்ள அழிவுகள் கூடுதலாக இடம் பெற்றதாகவும் அறியப்படுகின்றது.

# இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—29[15-10-1984]
வாரம்—திங்கள்
திதி—பஞ்சமி முற்பகல் 11-39ன்மேல் ஷஷ்டி
நக்ஷத்திரம் — மிருகசீரிடம் பின்னிரவு 3-23வரை

மேடம்:- புதுமையான சம்பவங்கள் நடைபெறும் சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு விருந்தினர்கள் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

இடபம்:- பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும் திருடர்கள் பயத்திற்கும் இடமுண்டு விவசாயிகள் முன்னெச்சரிக்கையுடனிருக்கவும் காணிப் பிணக்கு கவலையைத்தரலாம்.

மிதுனம்:- விரக்திநிலை உருவாகும் வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக் கூடும் உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம் நன்கு சிந்தித்தபின் செயலாற்றுக.

கடகம்:- குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தை அளிக்கும் எதையும் அலசிஆராய விரும்புவீர்கள் நல்ல தினம்.

சிங்கம்:- எதிலும் அவசரப் போக்கை கடைப் பிடிப்பீர்கள் தரக்குறைவான தகவல்கள் கிடைக்க கூடும் சகோதரர் ஒருவருடன் கருத்து வேற்றுமை தோன்றலாம் அடக்கம் வேண்டும்.

கன்னி:- நன்மையான திருப்பங்கள் காணப்படுகின்றன திறமையின் மூலம் புதிய தொழிலுக்கான வாய்ப்புக்கிடைக்கும் தாய் வழிமூலம் பொருள் வரவுக்கும் இடமுண்டு.

துலாம்:- வரவேற்க வேண்டிய சம்பவங்கள் இடம் பெறும் புத்திரர்களால் பெருமகிழ்ச்சிக்கு இடமுண்டு உள்ளத்தில் உவகை துள்ளும் பெரியஇடத்துத் தொடர்பு பெருமையைத் தரும்.

விருச்சிகம்:- அன்னியவாசம் அமைதிக்கு உலைவைக்கும் அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

தனுசு:- குடும்பவழிசுகத்திற்கும் குறிக்கோள் நிவர்த்திக்கும் இடமுண்டு காதலர்களுக்கு கற்கண்டான தினம்

மகரம்:- எண்ணிய காரியத்தில் தடையும் எதிர்பாராத விபத்துக்கும் இடமுண்டு ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும்,

கும்பம்:- புண்ணிய காரியங்களில் ஈடுபாடு ஏற்படும் பிதாவழிச் சுகமும் உண்டு.

மீனம்:- தொழில் முன்னேற்றத்திற்கிட முண்டு கொடுக்கல் வாங்கல்ளில்பிணக்கு ஏற்படும் இன்று அதிகமுதலீட்டை தவிர்க்ககவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## மதுறுஓயா நீர்பாய்ச்சும் வைபவம்

(கொழும்பு)

மகாவலி திட்டத்தின்கீழான மதுறுஓயா அணையின் முதலாவது நீர் பாய்ச்சும் வைபவம் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

மதுறுஓயா நீர்த்தேக்கத்திலிருந்து பாயும் நீரின்மூலம் 1400 ஹெக்டர் நிலம் நெற்செய்கைக்குட்படுத்தப்படுவதோடு, 2500 விவசாயக்குடும்பங்களும் நன்மையடையவுள்ளன.

இவ் வைபவத்தில் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினிதிஸநாயக்கா, இலங்கைக்கான அமெரிக்கத்தூதர் திரு. ஜோன்எச்ரீட், பொலநறுவ எம். பி. திரு. எச். ஜி. பி. நெல்சன் உட்பட மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.



நல்லூர் இந்து விடுதியில் நடந்த பத்திரிகையாளர் ஈ. கே. ராஜகோபால் எழுதிய 'வல்வெட்டித் துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்' என்றநூல் வெளியீட்டு விழவில் யாழ் மாநகர ஆணையளர் திரு சீ. வி. கே. சிவஞானம் பேசிக்கொண்டிருக்கிறார். கலைஇலக்கிய பத்திரிகை நண்பர்கள் ஏற்பாட்டில் இவ்விழா நடந்தது.


# பற்றீஷியன்இன்ஸ்ரிரியூட்ஸ்

கீழ் குறிப்பிட்டவைக்கு
செய்முறை நெறிமுறை உட்பட்ட
எமது அடுத்த வகுப்புகள் எதிர்வரும்
சனிக்கிழமை 20-10-1984-ல்
ஆரம்பமாகும்

| | |
|---|---|
| ★ மோட்டார் மெக்கானிஸம் (MOTOR MECHANISM)<br>★ எலக்ரிக்கல் என்ஜினியரிங் வேர்க்ஸ் டிப்புளோமா (ELECTRICAL ENGINEERING WORKS DIPLOMA)<br>★ படம்வரைதல் பில்டர்ஸ் குவாண்ரிரிஸ் உட்பட (DRAFTS ANSHIP — INCLUSIVE OF BUILDERS QUANTITIES)<br>★ எலெக்ரோனிக்ஸ் (ELECTRONICS) | 6 மாதகால பகுதி நேர வகுப்பு |
| ★ கடைச்சல் இயந்திர இயக்குதல் (LATHE OPERATION)<br>★ மின் வெல்டிங் (ARC WELDING)<br>★ றெப்றிஜரேஷன் (REFRIGERATION)<br>★ தொழிற்சாலைகள் மின்இணைப்பு (FACTORY WIRING) | 3 மாத கால பகுதி நேர வகுப்பு |
| ★ வீட்டு மின் இணைப்பு (HOUSE WIRING)<br>★ நீர் குழாய் இணைப்பு (PLUMBING) | 1 மாதகால பகுதி வகுப்பு |

இவ் நிறுவனத்தில் விற்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் மட்டும் வியாழன் 18-10-1984 பி.ப. 4-00 மணிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பப் பத்திரமும் மற்றும் விபரங்களும் இக் கந்தோரில் நேரில் வந்து மு. ப. 9-30 மணி தொடக்கம் பி ப, 4-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்

ஒவ்வொரு வகுப்பிலும் 15 பேர் மாத்திரம் விண்ணப்பிக்கும் கிரமப்படி சேர்க்கப்படுவர். ஆகவே உடன் விண்ணப்பித்து ஏமாற்றத்தைத் தடுக்கவும்.

பதிவாளர்,
பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.



கனடா, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும், BERLIN செல்ல விமானச் சீட்டுக்களை உடனடியாகப் பதிவு செய்வதற்கும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

**வின்ஸர்** [யாழ்.]
10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர் - சாவித்திரி
**ஜக்கம்மா**

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 4-45
THE MOUNTAIN MEN
Colombia Pictures Release

15 and 16-10-84
**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 4-30 6-45
James Caraner in
THE FAN
(Color)
Story of a great Star

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
எம். ஜி. ஆர்- சரோஜாதேவி
எம். ஆர். ராதா
**தாயைக் காத்த தனயன்**
(புதிய பிரதி)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
சிவாஜி - ஜெயலலிதா
**பட்டிக்காடா பட்டணமா**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
சிவாஜி, லட்சுமி
**தங்கைக்காக**
18 முதல்
10-15, 12-30, 2-15, 4-15, 6-00
Bruce lee
DRAGON STRIKES AGAIN
(Colour)

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்.
ரஜனிகாந்த்- சௌகார்ஜானகி நடித்த
**தீ**
தீபாவளி வெளியீடாக
கே. பாலச்சந்தரின்
**பூவிலங்கு**

முதல்தர 'திகில்' படம்
**றீகல்** [யாழ் நகர்]
சில தினங்கள் மட்டும்)
10-30, 2-15, 4-30, 6-30
VISITING HOURS
விறுவிறுப்புடன் கூடிய திகிலூட்டி திடுக்கிட வைக்கும் இப்படத்தை இருதயம் பலவீனமானவர்கள் பார்ப்பதை தவிர்க்கவும்.
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

**லிடோ** சினிமா
15 முதல் 17 வரை
10-30. 2-30, 6-30
**அந்தரங்கம்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-30
THE HOWLING
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

# யாழ். செயலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்குவது நிறுத்தம் பொதுமக்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க செயலகத்திலுள்ள பதிவாளர் காரியாலயத்தில், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்குவது நேற்றுடன் நிறுத்தப்பட்டுள்ளதால் வெளிநாடு செல்பவர்களில் மாணவர்கள் உட்பட ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள்பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பிரதிபண்ணும் இயந்திரம் கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இக்காரியாலயத்தில் கையால் எழுதிய பிறப்பு அத்தாட்சிப் பத்திரங் வழங்கப்பட்டுவந்தன.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் எழுதும் கடதாசி முடிவடைந்ததால், நேற்று முதல் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அடையாள அட்டைக்கு விண்ணப்பம் செய்வதற்குப் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் முக்கியமாகத் தேவைப்பட்டு வந்தது. தற்போது பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதால், அடையாள அட்டைபெறுபவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். (க-மா)

## யந்திரம் கொள்ளை

(கொழும்புத்துறை)

இலங்கை தேசிய சேமிப்பு வங்கியின், யாழ்ப்பாணம் கிளைக் காரியாலயத்திலிருந்து 'போட்டஸ்டாட்' இயந்திரக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதகாப் புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ். பிரதான வீதியில் மேற்படி கிளை அலுவலகம் இருக்கிறது.

நேற்றுமுன்தினம் காலை மேற்படி வங்கிக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள், அங்கிருந்தவர்களைப் பயமுறுத்தி, 'போட்டஸ்டாட்' இயந்திரத்தைக் கொள்ளையடித்துச் சென்றுவிட்டார்களாம். (மா)



## மனிதருள் மாணிக்கமாக வாழ்ந்தவர்

மனிதருள் மாணிக்கமாக விளங்கிய அதிபர் சுப்பிரமணியம் மகேசன் அவர்கள் மறைந்து ஓர் ஆண்டு பறந்தோடி விட்டது. மலேசியாவில் பிறந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்விகற்று வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் உதவி ஆசிரியராகவும் பின் உப அதிபராகப் பதவி உயர்ந்தும் ஈற்றில் கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலயத்தில் அதிபராகவும் அமர்ந்து அளப்பருஞ் சேவையாற்றிய அமரர் சு. மகேசன் அவர்கள் சமூக வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன ஆரம்பகாலத்தில் அவர் வட்டுக்கோட்டை இந்துவாலிபசங்கத்தின் போஷகராகவும், வட்டுக்கோட்டை ஐக்கிய பண்டகசாலையின் உப தலைவராகவும் பின்னர் நிர்வாகச் செயலாளராகவும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் காரியக்குழு அங்கத்தவராகவும், வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டக் கந்தசுவாமி கோவில்ப் பரிபாலன சபை அங்கத்தவராகவும், சித்தங்கேணி மகா கணபதிப் பிள்ளையார் கோவில் நிர்வாகக்குழு அங்கத்தவராகவும், மேற்கு யாழ்ப்பாண ஆசிரிய சங்கத்தின் தலைவராகவும் வடமாகாண ஆசிரியசங்கத்தின் தலைவராக இருமுறையும் தேசிய ஆசிரியசங்கத்தின் உப தலைவராகவும், கொழும்பு விவேகானந்த சபையின் உப தலைவராகவும் இருந்துஆற்றிய அரும்பெருஞ் சேவைகள அவரது சமூகப்பணியை நன்கு எடுத்துகாட்டுகின்றன.

அவரில் சிறுவயதிலிருந்தே காணப்பட்டதலைசிறந்தகோட்பாடு ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பதாகும். ஆண்டவனுல் படைக்கப்பட்ட மக்கள் யாவரும் சமத்துவமாகச் சகோதரபான்மையோடு, கல்வியாகிய ஞான ஒளிபெற்று வாழவேண்டுமென்ற சர்வோதயக் கொள்கையோடு வாழ்ந்தவர் அமரர் மகேசன் அவர் சிறந்த சமதர்மவாதியாகவும் தொழிற்சங்கவாதியாகவும் எடுத்த கருமத்தை விடாது முயன்றுநிறைவேற்றும் கருமவீரராகவும் அதிஉன்னத நிர்வாகஸ்தராகவும் திகழ்ந்தவர். எந்தக் கருமத்தையும் மிகவும் ஆழமாகச் சிந்தித்து உற்றஒருவரோடு கருத்துப்பரிமாறி முடிவுக்கு வந்தபின்னர் தான் செயலில் இறங்குவர். எண்ணித்துணியும் கருமவீரன்.

கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலம் திரு. மகேசன் அதிபராக கடமையாற்றத் தொடங்கிய நாளிலிருந்து கடந்த பத்து ஆண்டுகளில் படிப்படியாக உயர்ந்து கல்வி சம்பந்தமான சகல துறைகளிலும் ஏனைய பெருங் கல்லூரிகளோடு தோளோடு தோள் நிற்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது.

—வைத்திலிங்கம்துரைச்சாமி
(இளைப்பாறிய அதிபர்)

## ரூபவாஹினி

### இவ்வாரத் தமிழ் நிகழ்ச்சிகள்

15-ம் திகதி திங்கட்கிழமை
மாலை
7-15 கலை அரங்கம் ''துணை ஒன்று'' தொலைக்காட்சி நாடகம் அங்கம்- 2

16-ம் திகதி செவ்வாய்கிழமை
மாலை
6-30 நம் நாட்டுத் திரைப்படம் ''நான் உங்கள் தோழன்'' பாகம்-3

17-ம் திகதி புதன்கிழமை
மாலை
5-30 இது உங்கள் நாடு [தமிழ்]

19-ம் திகதி வெள்ளிக்கிழமை
மாலை
6-00 விளையாட்டுப் பயிற்சி [தமிழில் உரையுடன்]

### இன்று

மாலை
5-30 உங்கள் நாடு நிகழ்ச்சி
5-35 ஆங்கில நிகழ்ச்சி
6-00 ஆங்கில நிகழ்ச்சி
6-20 வெள்ளைப் பிரம்பு தின நிகழ்ச்சி
6-35 சஞ்சிகை நிகழ்ச்சி
6-55 செய்திகள் [தமிழ்]
7-15 கலையரங்கம்
7-45 'றேகா' நிகழ்ச்சி
8-15 செய்திகள் [சிங்களம்]
8-35 உலக தின நிகழ்ச்சி
8-55 ஆங்கில நிகழ்ச்சி
9-30 செய்திகள் [ஆங்கிலம்]
10-00 ஆங்கில நிகழ்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 ஆங்கில நிகழ்ச்சி தொடர்ச்சி
10-55 ஒளிபரப்பு முடிவு



## ஓய்வு பெறும் ஆசிரியர்

''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவன்''.

அதுவும் ஆரம்பக் கல்வியை புகட்டும் ஆசிரியர்கள் பொறுப்புமிக உன்னதமானது.

அத்தகைய பெரும்பணியை தன்கடனாகக் கொண்டு கடந்த 30ஆண்டுகளாகக் கோப்பாய் நாவலர்இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றித் தமது 36 வருட சேவைமுடித்து அறுபதாவது

[8ம் பக்கம் பார்க்க]

## 31-வது நாள் நினைவஞ்சலி

(1984 - 10 - 17)

செல்வி கௌசல்யா குழந்தைவடிவேல்

மலர்வு: 1970-7-20 உதிர்வு: 1984-09-18



எங்கள்அனைவரையும் ஆறுத் துயரில் ஆழ்த்திவிட்டு இறைவியுடன் இரண்டறக் கலந்த எம் இளந்தேவதையே! இறைவனுள் இருக்கும் இறைவியுடன் நீ இருந்து எம் விக்கினங்களை நீக்கி எம்மை இரட்சிப்பாய் தாயே!

உங்கள் ஆத்மா இறைவனுடன் சாந்திபெறப் பிரார்த்கின்றோம்!

உன் பிரிவால் வாடும் உன் அன்பு
ஐயா, அம்மா, அப்பாச்சி, அம்மாச்சி, பெரியப்பாமார், பெரியம்மாமார், சிற்றப்பாமார், சின்னம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணன்மார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், நண்பர்கள்.

குச்சம் வீதி, வல்வெட்டித்துறை,
1984-10-10. (146)

## 31ஆவது நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 1901-08-15

மறைவு: 1984-09-15

### திரு. தில்லைநாதர் சிவசம்பு

(இளைப்பாறிய சிறுப்பர்)

எங்கள் உறைவிடத்தில் ஓரிடம் என்றுமே நிரம்பமுடியாத இடைவெளியாயிற்று. என்றும் எங்கள் இல்லத்தில் வாழ்வீர்கள் என்ற நம்பிக்கையில் வாழ்கின்றோம். தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள் உறவினர்.

'லஷ்மி வில்லா,' சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய். (208)


வையவங்கள் எதுவாயினும்
வர்ணத்தில் மெருகூட்டி
சிறந்தமுறையில் உயர்ந்த தரத்தில்
குறைந்த செலவில் மனதில் பதித்திட
வீடியோ படப்பிடிப்புகளுக்கும்,
புகைப்படங்களுக்கும்.
நாடுங்கள்
• ஜெயபாலனின் •
**ராஜா வீடியோ நிலையம்**
துர்க்காபுரம், கே. கே. எஸ் வீதி, தெல்லிப்பளை.
உள்ளூதமான வீடியோ படங்களும், டெக் ஆகியவை எம்மிடம் வாடகைக்கு உண்டு
201

# பிரிட்டிஷ் பிரதமரின் வீடு

## 'ராக்கெட்' தாக்குதலுக்குள்ளாகலாம்

### ஸ்கொட்லண்ட்யாட் பொலிசார் தகவல்

லண்டன் அக் 14

வட அயர்லாந்தின் தீவிரவாத இயக்கமான ஐரிஸ் குடியரசு இராணுவம் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தாட்சரையும் அவரது சிரேஷ்ட அமைச்சர்களையும் படுகொலை செய்ய திட்டமிட்டுவருவதாக பிரிட்டிஷ் பொலிசார் தெரிவித்தனர்.

பிறைட்டன் ஹோட்டலில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தோல்வியடைந்தைத் தொடர்ந்தே இவர்கள் இந்நடவடிக்கையிலீடுபட்டுள்ளதாக கூறப்பட்டது.

பிறைட்டன் ஹோட்டல் குண்டு வெடிப்புச்சம்பவம் தொடர்பாகலிவர்பூல் விமான நிலையத்தில் வைத்து இளைஞரொருவரை பிரிட்டிஷ் பொலிசார் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர்.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தாட்சரின் வாசஸ்தலத்தின் மீது ராக்கெட் தாக்குதலொன்றும் ஐரிஷ் குடியரசு இராணுவத்தால் நடத்தப்படலாமென்றும் ஸ்கொட்லண்யார்ட் பொலிசார் தெரிவித்தனர்.

அடுத்தமாதம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் ஆரம்பமாவதையொட்டி பிரிட்டிஷ் பிரதமருக்கும், எலிசபெத் மகாராணிக்குமான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## விசாரணையின் பின் விடுதலையான ஊழியர்களுக்கு மீண்டும் அழைப்பு!

(கோண்டாவில்)

வடபிராந்திய போக்குவரத்து சபை கோண்டாவில்சாலையில் இருந்து மன்னார்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மூவர் கடமையைபொறுப்பெடுத்த சிலமணி நேரத்தில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்களான திரு. நா. நாகேந்திரன், திரு. கே. உலகநாதன், திரு. க. பேரானந்தராசா ஆகியஇந்த மூவரும் மீண்டும் தள்ளாடி இராணுவ முகாமுக்குவரும்படி அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் அடையாள அட்டைகளும் முதல்தடவை விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படும்பொழுதுராணுவ முகாமில் பெறப்பட்டிருந்தது.

## மட்டு. நகர் ஆஸ்பத்திரி டாக்டர், தாதி கைது!

### நடவடிக்கை குறித்து இன்று ஊழியர் ஆராய்வர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர் ஒருவர் உட்பட மூவர் பொலிஸ் தீவிர விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இம்மூவரும் பிரசவப்பிரிவில் பணியாற்றுகின்றவர்கள்.

டாக்டர் கௌரி மோகன், பெண் கங்காணி திருமதிஜீவா அழகுதுரை ஆகிய இருவரும் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது இரவில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தாதியான திருமதி சீதா ரவீந்திரராஜா வீட்டில் இருக்கும் போதே அழைத்துச் செல்லப்பட்டார்.

இவர்களை விடுதலை செய்வது குறித்து மட்டக்களப்பு மாவட்டசுகாதாரசேவைப் பணிப்பாளர் டாக்டர்மேலும் மயிலும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்ஊடாக பொலிசாருடன் தொடர்பு கொண்ட போது விசாரணையின் பின் இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று பொலிசார் தெரிவித்தனராம்.

இச்சம்பவம் தொடர்பாக ஆஸ்பத்திரி ஊழியர்கள் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை குறித்து ஆராய்வதற்காக இன்று கூடுகின்றார்கள்.

இவர்களைக் கைது செய்வதற்கு முன்னர் வேறுஒரு டாக்டர் கைது செய்யப்பட்டு பல மணிநேர விசாரணைக்குப் பின் விடுவிக்கப்பட்டதாகக் தெரிகின்றது.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்புப் பகுதியில் இளைஞர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகிறார்கள். கடந்த புதன்கிழமைக்கு பிறகு நேற்றுவரை சுமார் 60 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அமிர்தகழியில் கைது செய்யப்பட்ட கவிஞர் காசி ஆனந்தனின் தங்கை மலர் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை,

## இளம்பெண்ணுக்கு நேர்ந்தகதி!

[கிளிநொச்சி]

இளம்பெண் ஒருவரை ஆயுதமுனையில் நிர்வாணமாக்கிய பின்னர் அவர் அணிந்திருந்த நகைகளை மூவர் கொள்ளை அடித்துச்சென்றுள்ளதாக பொலிசில் புகார்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தமூவரையும் தன்னால் அடையாளம்காட்ட முடியும் என்று 30 வயதுடைய அந்த இளம்பெண் கிளிநொச்சி பொலிசில் முறையிட்டுள்ளார்.

பூநகரி 4-ம் கட்டையிலுள்ள தோட்டம்ஒன்றில் வசித்து வந்த திருமதி ராவுதர் ஜெசீமா என்ற அந்த இளம்பெண் தனிமையிலிருந்தபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## சுவீப் முடிவுகள்

[கொழும்பு]

நேற்று இழுக்கப்பட்ட 979 வது இலக்க தேசிய லொத்தர் சபை சுவீப்பின் முதல் மூன்று பரிசுகள் பெறும் டிக்கட்டுகள் வருமாறு:-

1-வது பரிசு
**18 W 0611**

2-வது பரிசு
**14 R 0054**

3-வது பரிசு
**18 G 0510**

## இன்று கலாவதி மரண விசாரணை

(யாழ்ப்பாணம்)

கரணவாய் கலாவதி மரண விசாரணை யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் இன்று காலை நடைபெறும்.

## பார்சலில்வரும் சஞ்சிகைகள் திருட்டு

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலிருந்து தபால் பார்சல் மூலம் இப்பகுதியில் உள்ள விற்பனைப் பிரதிநிதிக்கு அனுப்பிவைக்கப்படும் புத்தகங்கள், சஞ்சிகைகள் ஆகியன பார்சல் பிரிக்கப்பட்டு திருடப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்தவாரம் கொழும்பிலிருந்து பண்டத்தரிப்பு விற்பனைப் பிரதிநிதிக்கு தபாலில் அனுப்பிவைக்கப்பட்ட 'குமுதம்' சஞ்சிகை பார்சல் பிரிக்கப்பட்டநிலையில் ஐந்து பிரதிகள் இல்லாமல் வந்து சேர்ந்துள்ளதாம்.

இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரஸ்தாப விற்பனைப் பிரதிநிதி பண்டத்தரிப்பு தபால்நிலைய அதிபருக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

## பத்து மாதங்களுக்கு முன் கைப்பற்றப்பட்ட இந்தியப் படகுகள்

### திருப்பிக் கொடுக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் 10 மாதத்திற்கு முன் கடற்படையினால் கைப்பற்றப்பட்ட இந்திய கடற்றொழிலாளரின் நான்கு வள்ளங்களையும் திருப்பி ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

இந்திய கடற்றொழிலாளர் பிரச்னை தொடர்பாக அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேராவைச் இந்திய தூதராலய சட்ட ஆலோசகர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்தே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இச்சந்திப்பின் போது இந்திய தூதராலய இரண்டாவது செயலாளர் திரு. ஏப்ரகாம், அமைச்சு செயலாளர் திரு. எலோய் பெர்ணண்டோ பிராந்திய அமைச்சர் திரு. எஸ். இராசதுரை ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

10 மாதங்களுக்கு முன் கைப்பற்றப்பட்ட 4 வள்ளங்களும், பழுதடைந்து வருவதாகவும், இதனால் கடற்றொழிலாளர் தொழிலுக்கு செல்லாமல் கஷ்டப்படுவதாகவும் சட்ட ஆலோசகர் திரு ஆர் பாலசுப்பிரமணியம் எடுத்துக் கூறினார். இதைத் தொடர்ந்து அமைச்சர் 4 வள்ளங்களையும், உடன் விடுவிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்குமாறு பணித்துள்ளார்.

## குருநகரில் ஒய்வூதியம்

[யாழ்ப்பாணம்]

வடபகுதி தபாலகங்களில் ஒய்வூதியம் பெற்றவர்களுக்கு இன்று முதல் குருநகர் மக்கள் வங்கக்கு அருகிலுள்ள கட்டடத்தில் ஒய்வூதியம் வழங்கப்படும். [க]

## ஓய்வுபெறும்...

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

வயதில் இளைப்பாறுகின்றார். திரு. சு. கனகசபை இப்பாடசாலையிலேயே தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் அதிபர் பதவிவகித்துப் பாடசாலை வளர்ச்சியில் மிகவும் சிரத்தையெடுத்து அதனை முன்னேற்றி வைத்தார். அவரது விடா முயற்சியே மேற்படி பாடசாலை மாணவர் தொகை அதிகரிப்பும், கல்வி முன்னேற்றமும் கோப்பாய் வட்டாரத்திலேயே சிறந்த தரமுள்ள ஆரம்பபாடசாலை என்ற பெயரையும் இப்பாடசாலைக்கு ஏற்படுத்தின.

கோப்பாய் சரஸ்வதி பெண் பாடசாலை ஸ்தாபகரும் முகாமையாளருமாகிய திரு. மு சுவாமிநாதன் ஜே பி தம்பதிகளின் புதல்வராகிய திரு. கனகசபை தனது ஆசிரிய சேவையில் இருந்து இளைப்பாறினாலும் சமூகசேவைகளில் அவரது தொண்டு என்றும் இப்பகுதிமக்களுக்கு கிடைக்க இறைவனை வேண்டுகிறோம்

சோ. இ பி. குருக்கள்
கோப்பாய்

## 1 நாள் கிரிக்கெட்: இந்தியா வெற்றி

(இஸ்லாமாபாத்)

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே இஸ்லாமபாத்தில் நடைபெற்ற இரண்டாவது 1 நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா 64 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

இந்தியா குறிப்பிட்ட ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 260 ஓட்டங்களை எடுத்தது, டிலிப் வெங்சாகர் 88 ஓட்டங்களையும், சந்தீப் பாட்டீல் 72 ஓட்டங்களையும் ஆட்டமிளக்காது பெற்றனர். பாகிஸ்தான் 196 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது

முதலாவது 1 நாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது (சூ)

## நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி

(கல்வியங்காடு)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலையத்தின் நூல் நிலையம் புத்தகங்களை இரவல் கொடுக்கும் பகுதியை ஆரம்பித்துள்ளது.

தமிழ் பகுதி நூல் நிலையங்களுக்கு அண்மைக்காலங்களில் ஏற்பட்டுவரும் நிலைமைகளை கருத்தில் கொண்டு ஒவ்வோர் சன சமூக நிலையங்களும் நூல் நிலையங்களை நடாத்துவது அவசிய மன்பதால் இவ் இரவல் கொடுக்கும் பகுதி மக்கள் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நூல் நிலைய பொறுப்பாளர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா இராசம்மா

திருநெல்வேலி கேணியடியைச் சேர்ந்த திருமதி செல்லையா இராசம்மா காலமானார். இவர் காலஞ்சென்ற இளைப்பாறிய ரீமேக்கர் திரு. செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுந்தர்லிங்கம் (எஞ்சினியர், லண்டன்) பரமேஸ்வரி, ஞானசவுந்தரி, லலிதாதேவி, பாலச்சந்திரன் (டுபாய்), இராமச்சந்திரன் (எக்கவுண்டன், யூனிவேர்சல் F வப்றைற்ரேஸ் லிமிட்டட், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனபாக்கியம் (லண்டன்), பொன்னுத்துரை (ஆசிரியர், இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம்), சபாரத்தினம் (ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி), சிறீவிசாகரராசா (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), சியாமளா (மானிப்பாய்) ஆகியோரின் மாமியாரும், கலட்டி சீனியர் லேனைச் சேர்ந்த காலஞ்சென்ற திருமதி பாக்கியலட்சுமி, திரு வாமதேவன், திரு. பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று 15-10-84 திங்கள் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும், இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (224)

## மரண அறிவித்தல்

### செல்லையா செல்வராசா

(வெள்ளையன்)

(தியேட்டரடி, சங்கானை)



இவர் செல்லையா இராசாத்தி தம்பதிகளின் புதல்வரும் செல்வராணி, யோகராணி, யோகமலர், அசோகராசா, காந்தராசா, விஜியசிறீ, மஞ்சுளா அகியோரின சகோதரருமாவார் சங்கானையிலுள்ள இவரது இல்லத்திலிருந்து நாளை 16-10-84ல் தகனக் கிரியைக்காக விழா வெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். (172)

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலகக அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.